# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,934/5 — 1970 දෙසැම්බර් 3 වැනි බ්‍රහස්පතින්ද — 1970.12.3

14,934/5 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ.–பீ. 18/63

எச். ஈ. பீ/1/7/17.

### 1968 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, புத்த சார்வக தர்மபீடச் சட்டம்

1968 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, புத்த சார்வக தர்மபீடச் சட்டத்தின் 13 ஆம், 18 ஆம் பிரிவுகளின் கீழ் புத்த சார்வக தர்மபீடத்தின் கல்வி, நிர்வாக சபையால் ஆக்கப்பட்டு குறித்த சட்டத்தின் 18 (3) ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கல்வி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட நியதிச் சட்டம்.

பி. உடகம,
நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஞூ நவம்பர் மீ 30 ந் டெ.

### நியதிச் சட்டம்

(1) இந்நியதிச் சட்டம் புத்த சார்வக தர்மபீட 4 ஆம் இலக்க நியதிச் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

(2) 1968 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, புத்த சார்வக தர்மபீடச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 1969 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 21 ஆந் திகதிய 14,850/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான 2 ஆம் இலக்க நியதிச் சட்டம், அதற்குள்ள அட்டவணையில், ஆட்சேர்ப்புத் திட்டம் என்ற தலையங்கத்தின் கீழ் " அரசாங்க கசெற்றில் விளம்பரம் செய்தல் மூலம் " என்ற சொற்கள் சொல்லப்பட்ட தலையங்கத்திற்ரேன்றும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக " விளம்பரம் செய்தல் மூலம் " என்னுஞ் சொற்களைச் சேர்த்தல் மூலம் இதனால் திருத்தப்படுகின்றது.

(3) 1968 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, புத்த சார்வக தர்மபீடச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 1969 ஆம் ஆண்டு யூலாய் மாதம் 18 ஆந் திகதிய 14,862 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான 3 ஆம் இலக்க நியதிச் சட்டம் அதன் 5 ஆம் வாசகத்தில் "ஒரு மாதத்துக்கு இரு தடவைகளுக்கு மேற்படாமல் " என்ற சொற்களுக்குப் பதிலாக " வாரத்துக்கு ஒரு முறை " என்ற சொற்களை இடுவதன்மூலம் இதனால் திருத்தி அமைக்கப்படுகிறது.

12–385


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.


688/9